பக்கங்கள் 16+3

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | மார்கழி 27 ஞாயிற்றுக்கிழமை 11.01.2026 | அதிர்வு 165

## மூச்செடுக்க சிரமப்பட்ட கிளிநொச்சி பெண் சாவு!


மூச்செடுக்க சிரமப்பட்ட இளம் குடும்பப் பெண் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி – அம்பாள்குளம் பகுதியைச் சேர்ந்த அஜித்குமார் ரவீனா (வயது 23) என்பவரே இவ்வாறு 03

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்







# தமிழரசு – சங்கு அடுத்த வாரம் முக்கிய சந்திப்பு

## உறுதிப்படுத்தினார் சுமந்திரன்

மாகாண சபைத் தேர்தல் எந்த முறைமையின் கீழ் நடத்தப்பட வேண்டும் என்பதை ஆராய்வதற்காக 12 பேரடங்கிய விசேட தெரிவுக்குழுவை நியமிப்பதற்கான யோசனை அரசால் முன்வைக்கப்பட்டிருக்கும் நிலையில், தேர்தலை இழுத்தடிப்பதற்கான இந்த முயற்சியை உரியவாறு கையாண்டு, இவ்வருடத்துக்குள் தேர்தலை நடத்துவதற்கான அழுத்தங்களை எவ்வாறு பிரயோகிப்பது என்பது குறித்து இலங்கைத் தமிழரசுக் கட்சியும் 03



# அரியாலை ரயில் விபத்தில் காயமடைந்த இளைஞர் பலி

(பூ.லின்ரன்)

யாழ்ப்பாணம் – அரியாலை 13ஆம் கட்டைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற ரயில் விபத்தில் படுகாயமடைந்த இளைஞர் இன்று உயிரிழந்துள்ளார்.

முத்தமிழ் வீதி, கொட்டடி பகுதியைச் சேர்ந்த சிவராஜா சிவலக்சன் (வயது 23) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த 03

## பொங்கல் தினமன்று யாழ். வரும் ஜனாதிபதி

### பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்பார்



(எஸ்.நிதர்ஷன்)

தைப்பொங்கல் தினமான எதிர்வரும் 15ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்கவுள்ளார். 03



# சவால்களை கடந்து வந்த நீங்கள் நம்பிக்கையுடன் பயணியுங்கள்!

## டக்ளஸுக்கு கங்காராம விகாராதிபதி ஆலோசனை



(எஸ்.நிதர்ஷன்)

கொழும்பு கங்காராம விகாராதிபதி கலாநிதி வண. கிருந்தே அஸ்ஸாஜி நாயக்க தேரரை மரியாதை நிமிர்த்தம் இன்று சந்தித்துக் கலந்துரையாடிய ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, விகாரதிபதியின் ஆசிகளையும் பெற்றுக்கொண்டார்.

இதன்போது, ”பல்வேறு சவால்களையும் கடந்து வந்த நீங்கள், எதிர்காலத்தை நம்பிக்கையுடன் எதிர்கொள்ள வேண்டும். இந்த நாட்டிலே நியாயமான முறையில் சிந்திக்கின்ற தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் மத்தியில் உங்களின் அரசியல் செயற்பாடுகள் தொடர்பாக உயர்ந்த அபிப்பிராயம் இருப்பதை அவதானிக்க முடிகின்றது.” – என்று விகாராதிபதி தெரிவித்தார்.

மேலும், திட்டமிடப்பட்ட காரணங்களுக்காக அவதூறு பரப்புகின்றவர்கள் தொடர்பாக அலட்டிக்கொள்ளாமல் மக்கள் நலன் சார்ந்த செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் எனவும், டக்ளஸ் தேவானந்தாவின் அரசியல் செயற்பாடுகளைத் தொடர்ந்தும் நாட்டு மக்கள் எதிர்பார்ப்பதாகவும் இந்தச் சந்திப்பின்போது விகாராதிபதி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# பிரதமர் பதவியில் இருந்து ஹரிணி நீக்கப்படார்! கல்வி அமைச்சுப் பதவியும் பறிக்கப்படமாட்டாது!!

## வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் திட்டவட்டம்

"பிரதமர் பதவியில் இருந்து கலாநிதி ஹரிணி அமரசூரியவை நீக்குவதற்குரிய எந்தவொரு தேவைப்பாடும் எழவில்லை. அந்தப் பதவியில் அவர் தொடர்வார். அத்துடன், அவரிடம் இருந்து கல்வி அமைச்சும் பறிக்கப்படமாட்டாது."

– இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர் காணலின்போது, பிரதமர் பதவியில் மாற்றம் வருமா, அவரிடமிருந்து கல்வி அமைச்சு பறிக்கப்படுமா எனக் கேள்வி எழுப்பப்பட்டது.



இதற்குப் பதிலளித்த விஜித ஹேரத், "கல்வி மறுசீரமைப்பு என்பது பரந்தப்பட்ட விடயமாகும். இதில் ஒரு அலகில்தான் பிழை இடம்பெற்றுள்ளது. அது பற்றி விசாரணை நடத்தப்படுகின்றது.

எனினும், குறுகிய நோக்கில் இந்த விடயம் தொடர்பில் அரசியல் நடத்தப்படுகின்றது.

பிரதமர் பதவியில் மாற்றம் வராது. நாம் கூட்டுப் பொறுப்புடன் செயற்படுகின்றோம். கல்வி அமைச்சிலும் அவரே தொடர்வார்.

கல்வி மறுசீரமைப்பு என்பது சவால் மிக்க பணியாகும். அதனை நாம் செய்வோம். மக்கள் ஆணை அதற்கு உள்ளது."

– என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தமிழரசு - சங்கு...

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியும் அடுத்த வாரம் யாழ்ப்பாணத்தில் கூடி ஆராயவுள்ளன.

மாகாண சபைத் தேர்தல் எந்த முறைமையின் கீழ் நடாத்தப்படவேண்டும் என்பதை ஆராய்வதற்கும், அது குறித்த விதப்புரைகள் மற்றும் யோசனைகளை முன்வைப்பதற்கும் 3 மாத கால அவகாசம் வழங்கப்பட்ட 12 பேரடங்கிய விசேட செயற்குழுவை நியமிப்பதற்கான யோசனை ஆளும் தரப்பின் பிரதம கொறடாவான நளிந்த ஜயதிஸ்ஸவினால் கடந்த வாரத் தொடக்கத்தில் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை நியமிப்பது என்பது மாகாண சபைத் தேர்தலுக்கு முகங்கொடுப்பதற்குப் பயந்த அரசு, அதனை உடன் நடத்தாமல் இழுத்தடிப்புச் செய்வதற்கு மேற்கொள்ளும் ஒரு முயற்சி மாத்திரமேயாகும் என்று தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகள் ஏற்கனவே கடும் விசனத்தை வெளிப்படுத்தியிருந்தனர்.

மறுபுறம் கடந்த வியாழக்கிழமை தேசிய பத்திரிகைகளின் ஆசிரியர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களின் பிரதானிகளைச் சந்தித்த இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, அரசாங்கம் வெகு விரைவில் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடாகும் எனத் தெரிவித்திருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் எதிர்வரும் 16 ஆம் திகதி பிற்பகல் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கும் இடையிலான சந்திப்பு யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது மாகாண சபைத் தேர்தலை இழுத்தடிக்கும் நோக்கில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை நியமிப்பதற்கு அரசு மேற்கொண்டுவரும் முயற்சி குறித்தும், அதனை முறியடித்து மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துவதற்குரிய அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கான வழிமுறைகள் குறித்தும் விரிவாக ஆராயப்படும் என்று தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"மாகாண சபைத் தேர்தலை புதிய முறைமையில் நடத்துவதா அல்லது பழைய முறைமையில் நடத்துவதா என ஆராய்வதற்காகவே அரசு தெரிவுக் குழுவை நியமிக்கின்றது. அக்குழு புதிய முறைமையிலேயே மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் எனத் தீர்மானித்தால், அதன் பின்னர் எல்லை நிர்ணயத்தை மேற்கொள்வதற்கு ஓரிரு வருடங்கள் தேவைப்படும்.

எனவே, இவ்வருடம் மாகாண சபைத் தேர்தலை நடத்தும் உத்தேசம் அரசுக்கு இல்லை என்றே தோன்றுகின்றது. எனவே அடுத்த வாரம் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியுடனான சந்திப்பின் போது இது பற்றி விரிவாக ஆராய்வோம்." – என்றார்.

அதேவேளை இது பற்றிக் கருத்துரைத்த ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமசந்திரன், "தமிழரசுக் கட்சியுடனான சந்திப்பில் பேசப்படவுள்ள விடயங்கள் தொடர்பில் இன்னமும் தீர்மானிக்கப்படாத போதிலும், விசேட தெரிவுக்குழுவை நியமிக்கும் அரசின் முயற்சி குறித்து நிச்சயமாகப் பேசப்படும்." – என்றார்.

"மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்தாமல் இழுத்தடிக்கும் நோக்கிலேயே தெரிவுக்குழுவை நியமிப்பதற்கான முயற்சிகளில் அரசு ஈடுபட்டிருக்கின்றது என்ற விடயம் தமிழரசுக் கட்சிக்கும் தெரியும். தற்போது 3 மாத கால அவகாசத்துடன் நிறுவப்படும் தெரிவுக்குழுவின் கால அவகாசம் பின்னர் மேலும் நீடிக்கப்படும்.

அரசு உண்மையிலேயே மாகாண சபை முறைமையில் ஈடுபாடு கொண்டிருப்பின், தற்போது தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் தனிநபர் பிரேரணையை நிறைவேற்றி, பழைய முறைமையில் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும்.

அதன் பின்னர் அடுத்த தேர்தல் வரையான காலப்பகுதியில் எல்லை நிர்ணயம் உள்ளடங்கலாக புதிய முறைமையில் தேர்தலை நடத்துவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும். அதனைவிடுத்து, தேர்தலைக் காலதாமதப்படுத்துவதற்கு இவ்வாறான தெரிவுக்குழுவை நியமிக்கக்கூடாது." – என்றும் சுரேஷ் பிரேமசந்திரன் வலியுறுத்தினார்.

---

### மூச்செடுக்க...

உயிரிழந்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில்,

இவர் கடந்த 31ஆம் திகதி சுவாசிக்கச் சிரமப்பட்டுள்ளார். பின்னர் முதலாம் திகதி காலை கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். அதன் பின்னர் 3ஆம் திகதி மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இருப்பினும் அந்தப் பெண் சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக அவரது சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

---

### அரியாலை...

கடுகதி ரயிலுடன் மோட்டார் சைக்கிள் மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்தப் பகுதியில் பாதுகாப்பற்ற ரயில் கடவை காணப்படுகின்றது.

விபத்தில் படுகாயமடைந்த இளைஞர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்ப்பிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி இன்று உயிரிழந்துள்ளார்.

---

### பொங்கல்...

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும் ஜனாதிபதி, 15ஆம் திகதி மதியம் 2 மணியளவில் வேலணை தெற்கு ஸ்ரீ சுப்பிரமணியம் சுவாமி கோவில் முன்றலில் நடைபெறும் பொங்கல் நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளார்.

பின்னர் அங்கிருந்து மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய முன்றலில் நடைபெறும் பொங்கல் நிகழ்வில் மாலை 4 மணியளவில் கலந்துகொள்ளவுள்ளார்.

மறுநாள் 16ஆம் திகதி காலை 9 மணிக்கு மீசாலை ஆரம்ப பாடசாலையில் வீட்டுத் திட்டப் பயனாளிகளுக்கான காசோலை வழங்கும் நிகழ்வில் கலந்துகொள்வார்.

பின்னர் மதியம் 2 மணியளவில் கொக்குவில் தொழிநுட்பக் கல்லூரி மைதானத்தில் "முழு நாடும் ஒன்றாக..." போதைப்பொருள் ஒழிப்புக்கான தேசிய செயற்பாட்டு நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ரணிலுக்கு எதிரான வழக்கு

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி பதவியில் இருந்து இறங்கியதும், அவரது இடத்துக்குப் பதவியேற்ற அநுரகுமார திஸநாயக்கவின் அரசு தன்னுடைய அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையாகவே ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக அவரின் பதவிக்கால லண்டன் விஜய விவகாரத்தைப் பயன்படுத்தியது என்பது பல தரப்புகளும் வெளிப்படுத்தி வந்த விடயம்தான். அதுதான் உண்மை என்பது போல இப்போது விவகாரம் முடியும் எனத் தோன்றுகின்றது

இந்த விஜயத்துக்காக 16.6 மில்லியன் ரூபா அரசு நிதியை ரணில் விக்கிரமசிங்க துஷ்பிரயோகம் செய்தார் எனத் தெரிவித்து அவருக்கு எதிராக தற்போதைய அரசு முன்னெடுத்த வழக்கு இப்போது சட்டமா அதிபர் திணைக்களத்திலேயே பிய்ச்சல் பிடுங்கலுக்கு உள்ளாகி இருப்பதாகத் பெரிய வருகிறது.

இந்த விவகாரத்தை ஒட்டி முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அவரது செயலாளராக இருந்த சமன் எக்கநாயக்காவுக்கும் எதிராக வழக்குத் தொடுக்கலாமா, அதற்கான போதிய ஆதாரங்கள் குற்றப் புலனாய்வுத் தரப்பின் விசாரணைகளில் வெளிவந்திருக்கின்றனவா என்பவை தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்துக்குள்ளேயே முரண்பாடான கருத்து நிலை ஏற்பட்டிருப்பதாக இப்போது செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

இந்த விவகாரத்தை சட்டமா அதிபர் திணைக்களத்தில் மேற்பார்வை செய்து வரும் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் வசந்த பெரெரா போதிய சாட்சியங்கள், சான்றுகள் வழக்குத் தொடுப்பதற்கு இல்லை என்று சட்டமா அதிபருக்கு தாம் அளித்த அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

அதே சமயத்தில் மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் டிலீபா பீரிஸ் அதற்கு முரணாக ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதற்கு போதிய ஆதாரங்கள் உள்ளன என்று பிறிதொரு அறிக்கையை சட்டமா அதிபருக்கு அனுப்பி உள்ளார்.

அதேசமயம் இந்த விவகாரத்தை ஒட்டி லண்டனுக்கு விசாரணை நடத்துவதற்காக பிற தரப்புகளுக்குத் தெரியாமலேயே புறப்பட்டுச் சென்ற குற்றப் புலனாய்வு அதிகாரிகள் அணி, புறப்படுவதற்கு முன்னர் பிரிட்டன் அரசோடு பரஸ்பர சட்ட உதவி அனுமதியைப் பெற்றுக் கொள்ளவில்லை என்று சுட்டிக் காட்டப்படுகிறது. அதனால் அவர்களின் விசாரணைகளில் சட்டரீதியான வாக்குமூலங்கள் பெறப்பட முடியாமல் போய்விட்டன என்பதை பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் வசந்த பெரெரா தமது அறிக்கையில் சுட்டிக்காட்டி இருக்கிறார்.

இதேசமயம் விசேடமாக லண்டனுக்கு சென்று அங்கு குற்றப்புலனாய்வுத் துறையினர் நடத்திய விசாரணையின் சுருக்கக் குறிப்பை சமர்ப்பிக்குமாறு சட்டமா அதிபர் திணைக்களம் கோரியும் இன்னமும் அதனை குற்றப்புலனாய்வு விசாரணை அணி சட்டமா அதிபருக்கு சமர்ப்பிக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஆக மொத்தத்தில் முன்னாள் ஜனாதிபதிக்கு எதிரான அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையை அவசர அவசரமாக முன்னெடுப்பதில் காட்டப்பட்ட குழப்பம், இப்போது அந்த வழக்கை மேலும் இழுபறியில் மாட்டி இருக்கின்றது என்பதுதான் யதார்த்த நிலைமையாகத் தெரிகிறது.

ஆக, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான வழக்கு என்ற பெயரில் பெரிய ஆர்ப்பாட்ட எடுப்புகளை மேற்கொண்டு, அவரைக் கைது செய்து, சில தினங்கள் தேசிய வைத்தியசாலையில் சிறைத் துறைக் காவலில் அவரை ஒய்வெடுக்க வைத்து, அத்துடன் அவரைப் பாதுகாப்பாக வீட்டுக்கு அனுப்பி வைத்த அரசின் சாகசமாகவே இந்த விடயம் முடிந்து விடும் என்றே தோன்றுகின்றது.



# இலங்கையில் மனித உரிமைகளின் அண்மைக்காலப் போக்கு!

மனித உரிமைகள் என்பது மனிதராக பிறக்கும் அனைவருக்கும் இருக்கும் அடிப்படை உரிமையாகும். ஒரு பிரஜை ஜனநாயக நாட்டில் மட்டும் வாழ்ந்தால் அவனது வாழ்வு அர்த்தமானதாக கட்டமைத்து விடாது. அவன் அடிப்படையான உரிமைகளை அனுபவிக்கின்ற பொழுதே அந்த நாடு ஜனநாயகம் என்ற தன்மையை உறுதி செய்கின்றது. எனவே ஜனநாயக நாட்டிலேயே பிரஜைகள் நமக்கான உரிமையை பெற்றுக்கொள்ள முடியும். அதை பாசிச ஆட்சியிலோ எதேச்சை அதிகார ஆட்சியிலோ அவர்களுக்கான அடிப்படை உரிமைகளை வேண்டி நிற்க முடியாது. அங்கு உரிமைகள் மறுக்கப்பட்ட ஒரு விடயமாகவே காணப்படும். ஆகவேதான் ஜனநாயகத்தின் இன்றியமையாத ஒரு பண்புகளில் உரிமைகள் அடையாளப்படுத்தப்படுகின்றது.

ஆனால் இன்று ஜனநாயக நாடுகளின் ஆட்சியாளர்களின் தான்தோன்றித்தனமான ஆட்சிப் போக்கு மற்றும் அதிகார குவிப்பு காரணமாக அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகின்றன. இது இன்றைய காலப்பகுதியில் உரிமைகளை சுதந்திரமாக அனுபவிப்பதற்குச் சவாலாக அமைகின்றது.

இதற்கு நாம் எல்லா ஆட்சியாளர்களையும் குற்றம் சாட்ட முடியாது. ஒரு சில ஆட்சியாளர்களின் செயல்பாடு இதற்குக் காரணமாகின்றது. முக்கியமாக சர்வதேச ரீதியில், அடிப்படை மனித உரிமை மீறலை இல்லாதொழித்து அதனை வலுப்படுத்தும் நோக்கிலேயே 1948 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையால் மனித உரிமைகள் பிரகடனம் வெளியிடப்பட்டது.

இதன் பிரதான நோக்கம் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவ நாடுகளில் மனித உரிமை மீறல் இடம் பெறுவதைத் தடுத்து மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதன் தன்மையிலேயே இன்று வரை ஐக்கிய நாடுகள் சபையால் உருவாக்கப்பட்ட மனித உரிமை பிரகடனமானது சர்வதேச ரீதியில் முன்னுதாரமாக கொள்ளப்படுகின்றது. இது 30 உறுப்புரைகளைக் கொண்டுள்ளமை முக்கியமானதொரு அம்சமாகும். அவற்றுக்குச் சான்றாகச் சில அடிப்படை உரிமைகளை நாம் குறிப்பிட முடியும். வாழ்வதற்கான உரிமை, கருத்து வெளியிடும் உரிமை, சுதந்திரமாக நடமாடுவதற்கு உரிமை, விரும்பிய சமயத்தை பின்பற்றும் உரிமை இவ்வாறு பல்வேறு உரிமைகளை அடிப்படை உரிமைகளாக உள்ளடக்கியுள்ளது.

உண்மையிலேயே உரிமைகள் அற்ற மனித வாழ்வு பாலைவனத்தைப் போன்றது என்றே குறிப்பிட முடியும். உரிமைகளில் மூலமே மனிதனுடைய அரசியல் சமூக வாழ்க்கை அர்த்தமானதாக அடையாளப்படுத்தப்படுகின்றது. என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. இலங்கையிலும் 1956 ஆம் ஆண்டு மனித உரிமை பிரகடனம் ஏற்றுக் கொண்டு அதனை அதிகார பூர்வமாகக் கையொப்பமிட்டது. இதன் அடிப்படையில் 1972 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அரசியல் அமைப்பில் மனித உரிமைகள் பற்றிய ஏற்பாடுகள் உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. எனினும் உரிமைகளை பாதுகாப்பதற்காக எந்த ஒரு கட்டமைப்பும் அங்கு அரசியல் அமைப்பில் உருவாக்கப்படவில்லை என்பது ஒரு குறைபாடாக சுட்டிக்காட்டப்படுகிறது.

எனவே தான் 1978ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியலமைப்பில் மனித உரிமை தொடர்பான ஏற்பாடுகள் உருவாக்கப்பட்டு அதில் உரிமையை பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளும் அரசியல் அமைப்பில் உருவாக்கப்பட்டன. எடுத்துக்காட்டாக உயர் நீதிமன்றங்களின் மனித உரிமை மீறல் தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்யக் கூடிய தன்மை மற்றும் ஒம்புஸ்ட்மன்ட் போன்ற ஏற்பாடுகளைக் குறிப்பிட முடியும்.

இலங்கையை பொறுத்த வரையில் அடிப்படை உரிமை மீறல் அதிகரித்துள்ளமை மிக முக்கியமான அம்சமாகும். அரசியலமைப்பின் ஊடாக அடிப்படை உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டு காணப்படுவதோடு அவ் உரிமை மீறலுக்கான நிவாரண ஏற்பாடுகள் காணப்பட்டாலும். இன்றுவரை மனித உரிமை மீறல்களை நாம் அவதானிக்கும் பொழுது "இலங்கை அரசமைப்பு உரிமைகள் மட்டும் அதனைப் பாதுகாப்பதற்கு கட்டமைப்புகள் காணப்படுகின்றதா? என்ற கேள்வி எமக்குள் எழுகின்றது."

"ஆம் அடிப்படை உரிமைகள் தொடர்பான ஏற்பாடுகள் காணப்படுகின்றன. ஆனால் அவை அரசியல்

தொடர்ச்சி

# இலங்கையில் மனித உரிமைகளின் அண்மைக்காலப் போக்கு!

தொடர்ச்சி

தலையீடு காரணமாக பிரயோகப்படுத்தப்படுகின்றமை இல்லை. மக்கள் தமக்கான உரிமைகளை மீறப்படும் போது அதற்கான தீர்வுகளை எட்டக்கூடிய வழிமுறைகள் காணப்படுகின்றன. ஆனால் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்றால் இல்லை."

இதுவரை காலமும் உரிமை மீறப்பட்டவர்களுக்கான தீர்வு எட்டப்பட்டுள்ளதா? இல்லை குறைவான தன்மைகளே காணப்படுகிறது. ஏன்?

அடிப்படை உரிமை மீறல் இடம்பெற்றுள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட அண்மைக்கான சம்பவங்களுக்கு அவற்றுக்கு இன்றுவரை தீர்வுகள் எட்டப்படாமையும் சர்வதேச ரீதியில் இலங்கை அதிகம் அழுத்தத்துக்கு உள்ளாகியமையும் நம்மால் அவதானிக்கும் கூடியதாக காணப்படுகின்றது.

உரிமைகள் என்பது ஒரு பிரஜை உயிருடன் இருக்கும் வரை அனுபவிக்கும் ஒன்று அல்ல. ஒரு பிரஜை இறந்த பின்பு அவர் நல்லடக்கம் செய்யும்வரை உரிமைகள் முக்கியமானவை. உரிமைகள் நிறைவு பெற்ற சமூகத்தையே ஜனநாயகம் என்று அடையாளப்படுத்தப்படுகின்றது. மாறாக உரிமைகள் மீறப்படும் சமூகங்களை அல்ல என்பதை நாம் நினைவு கொள்ள வேண்டும்.

இன்று பல நாடுகள் ஜனநாயக ஆட்சி முறை என்று குறிப்பிட்டாலும் அதன் போர்வையிலே ஜனநாயகம் என்பதில்லை. இலங்கையிலும் ஜனநாயக ஆட்சி என்பது வெளிப்படையாக ஒரு ஒரு பொம்மைப் பொருளாகத்தான் காணப்படுகிறது. ஆனால் உள்ளே பார்த்தால் பல்வேறு உரிமை மீறலுக்கான தீர்வுகள் இன்றும் எட்டப்படவில்லை என்பதே உண்மை.

**பயங்கரவாத தடைச்சட்டம்**

இலங்கையில் மனித உரிமை மீறல் இடம்பெற்றுள்ளமைக்கு பயங்கரவாத சட்டம் முக்கியமான காரணமாகும். 1979 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 48-ஆம் இலக்க பயங்கரவாத தடைச் சட்டம் ஆனது தற்காலிக ஏற்பாடு சட்டமாக திருத்தச் சட்டமாக தற்காலிக ஏற்பாட்டு திருத்தச் சட்டமாக 10-ம் இலக்க பயங்கரவாத தடைச் சட்டம் என குறிப்பிடப்பட்டது. அது 1982 ஆம் ஆண்டு நிரந்தரச் சட்டமாக நிறைவு செய்யப்பட்டது. யுத்த காலப் பகுதியில் அரசு தேசிய பாதுகாப்புக்காக உருவாக்கப்பட்டமை என்று கூறுகின்றது. ஆனால் இது ஒரு வகையில் ஏற்றுக்கொள்ளக்கூடியது தான் .

ஆனால் காரணம் இன்றி கைது செய்யப்பட்டு இன்றும் சிறையில் விடுவிக்கப்படாமல் இருக்கின்றார்கள். ஆகவே இங்கே எவ்வித குற்றம் புரியாதவர்களின் உரிமைகள் மீறப்பட்டுள்ளது. இதற்கான தீர்வு என்ன? இதற்கான அரசின் பொறுப்பு கூறல் என்ன? இவ்வாறு சிறையில் அடைக்கப்பட்ட மக்கள் சுதந்திரமான வாழ்வதற்கான உரிமை அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டுள்ளது. இதற்கான தீர்வுதான் என்ன? யுத்த காலப் பகுதியில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் இன்றும் அவர்கள் சார்பில் நீதியை வேண்டி நிற்கின்றது.

எனவே காணாமல் ஆக்கப்பட்டவர்களை விசாரிக்கும் உரிமை அவர்களின் குடும்பங்களுக்கு இருக்கின்றது. ஆனால் அதற்கான தீர்வு இன்னும் எட்டப்படவில்லை என்பது முக்கியமானது அரசு. அரசு என்பது ஒரு நாட்டின் உள்ள அனைத்து மக்களுக்கும் உரிமையை அனுபவிப்பதற்கான சூழலை உருவாக்குவது அரசின் முதன்மை கடமை ஆனால் இன்று இது தலைகீழாக மாற்றி உள்ளது அரசே அந்த உரிமைகளை பலவீனப்படுத்தியுள்ளமை முக்கியமானது.

இந்த பயங்கரவாத தடை சட்டத்துடன் தொடர்புடைய இன்னும் ஒரு விடயம் பயங்கரவாத தடைச் சட்டம் யுத்த காலப்பகுதியில் தேசிய பாதுகாப்பு நிமித்தும் காரணமாக உருவாக்கப்பட்டது. அதை ஒரு வகையில் கொண்டாலும். யுத்தம் நிறைவடைந்து இன்று வரை 15 வருடங்களுக்கு மேலாக கடக்கின்ற போதும் பயங்கரவாத தடைச் சட்டம் ஏன் நீக்கப்படவில்லை? இதற்கு பின்னால் இருக்கின்ற அரசியல் தலையீடு என்ன? இதனால் வடக்குக் கிழக்கு மக்களின் நடமாடும் உரிமை கருத்து வெளியிடும் உரிமை போன்ற பல்வேறு அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றன. இனிவரும் காலங்களிலாவது அரசு இந்த பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதில் கவனம் செலுத்துமா அதற்கான பொறுப்பு கூறலை நிறைவேற்றுமா என்பதற்கான அரசினுடைய பதில் கட்டாயம் தேவைப்படுகின்றது.

ஒவ்வொரு அரசுகளும் பதவி அமைக்கும் பொழுது இந்த உரிமை மீறல்களை குறைப்பதற்கான விடயங்களில் ஏன் செல்வாக்கு செலுத்துவதில்லை. அதற்கு அரசியல் தலையீடுகளா இனரீதியான பாகுபாடா? காரணமாக அமைகின்றன.

சர்வதேச ரீதியிலும் இலங்கை அரசு கடந்த காலங்களில் ஏற்பட்ட மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்பு கூற வேண்டிய நிலை காணப்படுகின்றது. அத்துடன் சர்வதேச ரீதியில் பல்வேறு அழுத்தங்களுக்கு உட்பட்டு உள்ளமை குறிப்பிடத்தக்கது. ஐக்கிய நாடுகள் சபையின் அண்மைக் காலத்தில் இடம்பெற்ற 56 ஆவது மாநாட்டில் இலங்கை அரசு பொறுப்புக் கூறலில் நிறைவேற தவறி உள்ளது என்பது முக்கியமானது.

சர்வதேச நாணய நிதியம் இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டம் உடனடியாக நீக்க வேண்டும் என்ற கட்டளையைப் பிறப்பித்துள்ளது. இதற்குப் பின்னால் உள்நாட்டிலே மக்களுடைய கோரிக்கைகளுக்கு அப்பாலும் அரசு ஏன் இன்னும் அந்த உரிமை மீறலுக்கான தீர்வையும் பெற்றுக் கொள்ளப்படுவதில்லை அந்த பயங்கரவாத சட்டத்தை நீக்குவதிலும் கவனம் செலுத்துவதில்லை.

ஒரு அரசினுடைய மக்கள் அந்த தேசிய அரசிலே தமக்கான உரிமை மீறலுக்கான தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியும். அதற்கான தீர்வு வெளிச்சத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியாது என்பதனை நாம் உணர வேண்டும். முதலாவதாக தமக்கான உரிமைகள் பாதுகாக்கப்படும் என்ற தன்மையிலே அவர்கள் ஆட்சியாளர்களை நம்பி தமது வாக்கை அளிக்கின்றார்கள். ஆனால் ஆட்சியாளர்களின் தான்தோன்றித்தனமான ஆட்சிப் போக்குக் காரணமாக இன்று மக்கள் உரிமைகளை அனுபவிப்பதில் சவாலுக்கு உட்படுத்தப்படுகின்றனர். ஆகவே உரிமைகள் என்பது ஒரு மனிதனுக்கு அடிப்படையானது ஒரு நாட்டின் அபிவிருத்தியில் இந்த உரிமைகள் முக்கியமானவை. ஒரு நாடு ஜனநாயக ரீதியில் வளர்ச்சியடைய வேண்டுமாயின் இந்த அடிப்படை உரிமைகள், பெரும்பான்மை, சிறுபான்மை, என்று பார்க்கப்படாமல் அனைவருக்கும் உறுதி செய்யப்பட வேண்டிய அடிப்படை அம்சமாகும்



பாலையா ரோஜனகுமார்,
ஊடக கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வாக அருளுரையும் ரூ.4 லட்சத்து 23 ஆயிரம் உதவியும்

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில்,

ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வாக, “திருவாசகம் என்னும் தேன்” என்ற தலைப்பில் ஆன்மீக அருளுரை இடம் பெற்றது.

ஆச்சிரம பேரவையின் உறுப்பினரும், ஓய்வுநிலை ஆசிரியருமான துரை கனே சமூர்த்தி உரை நிகழ்த்தினார்.

உதவித் திட்டங்களாக, யாழ். விழிப் புலனற்றோர் சங்கத்துக்கு 3 லட்சத்து 88 ஆயிரத்து 410 ரூபா தைப்பொங்கலுக்கான உதவியாக வழங்கப்பட்டது.

யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாக, 330 விழிப் புலனற்ற குடும்பங்களுக்கு தைப்பொங்கல் பண்டிகைப் பொதிக்கான அரிசி வழங்கப்பட்டது.

யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் தலைவர் யோ.சுதாகரனிடம் வாராந்த நிகழ்வில் வைத்து இந்த உதவி வழங்கப் பட்டது.

அத்துடன் வட்டுக்கோட்டை இளம் நிலா விளையாட்டுக் கழகத்தினரால் மேற்கொள்ளப்படவுள்ள மாணவர்களுக் கான கௌரவிப்பு நிகழ்வில் கற்றல் உபகர



ணங்கள் வழங்குவதற்காக 35,000 ரூபா நிதி வழங்கப்பட்டது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இந்த நிகழ்வு இடம்பெற்றது.







# குற்றச் செயல்களுடன் நேரடியாக தொடர்புடைய 14 பேர் நேற்றுக் கைது!

(உடப்பு க.மகாதேவன்)

நாடு முழுவதும் முன்னெடுக்கப் பட்டுவரும் குற்றத் தடுப்பு மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக் கையின் கீழ், நேற்று மட்டும் குற்றச் செயல்களுடன் நேரடியாகத் தொடர்பு டையவர்கள் என அடையாளம் காணப்பட்ட 14 பேர் கைது செய்யப்பட்டுள் ளனர்.

நேற்று நாடு முழுவதும் 30,322 நபர்கள்சோதனைக்குஉட்படுத்தப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சோதனையின் போது சந்தேகத்தின் பேரில் 679 பேர் கைது செய்யப்பட்டுள்ள னர்.

பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 275 பேரும், திறந்த பிடியாணை கொண்ட 150 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில், மதுபோதையில் வாக னம் ஓட்டிய 507 சாரதிகள் கைது செய் யப்பட்டுள்ளனர்.

அத்துடன், கவனக்குறைவாக வாக னம் செலுத்தியமை உள்ளிட்ட போக்கு வரத்து விதிமீறல்கள் தொடர்பில் 5,283 பேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது.

# பெரியவர்களுடன் சேரும் அதிக சிறுவர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாகின்றனர்

## வைத்தியர் வினோதா அச்சுதன் தகவல் தெரிவிப்பு

(மரியசீலன் திலைக்ஸ் - வடமராட்சி நிருபர்)

மாணவர்கள் மத்தியிலும் போதைப் பொருள் அதிகமாக பரவியுள்ளது. பெரிய வர்களுடன் சேரும் போதே அதிக சிறுவர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாகின்றனர்.

இவ்வாறு வைத்தியர் வினோதா அச்சுதன் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருளுக்கு அடிமையான வர்கள் உரிய முறையில் சிகிச்சை பெறாமல் சமூகத்தின் மத்தியில் ஒழிந்து இருப்பதாக ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே வைத்தியர் வினோதா அச்சுதன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் போதை பொருளின் தாக்கம் அதிகமாக பரவியுள்ளது. இது சிறுவர்களையும் பாதித்துள்ளது.

போதைப் பொருள் பாவனை செய்யும் பிள்ளைகள் சமூகத்துக்கு வேண்டப்படாத பிள்ளைகள் என்று ஒருபோதும் நினைக்க வேண்டாம்.

தொடக்கத்திலேயே போதைப்பொருளுக்கு அடிமையான பிள்ளைகளை அழைத்துவந்து உரிய முறையில் சிகிச்சையை பெற்றுக் கொடுத்தால் அவர்களை ஆரம்பத்தில் இருந்த பிள்ளைகளாக மாற்ற முடியும்.

பல வருடங்களாக சாவகச்சேரியில் போதை பொருளுக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சை அளித்து வருகிறேன். என்னிடம் சிகிச்சை பெற்ற பல நோயாளிகள் போதை பொருள் பழக்கத்தில் இருந்து முற்றாக விடுபட்டு இருக்கிறார்கள்.

சிகிச்சை பலனளிக்காது அல்லது போதைப் பொருள் பாவிப்பவர்களை உதவாத பிள்ளைகள் என்று தவறாக நினைக்காமல் அவர்களுக்கு உரிய முறை யில் சிகிச்சை பெற்றுக் கொடுத்தால் அவர்களை மாற்ற முடியும்.

தற்போதைய காலத்தில் பாடசாலை மாணவர்களும் இந்தப் போதை பொருளால் பாதிப்படைந்துள்ளார்கள்.

ஒவ்வொரு மாணவர்களையும் வகுப்பறையில் நன்றாகக் கவனித்துவரும் ஆசிரியரால் அந்த மாணவன் போதைப் பொருளால் கடுமையாக பாதிப்படைந்திருந்தால் அந்த மாணவனுடைய செயற்பாட்டை வைத்து மிக இலகுவாக கண்டுபிடிக்கலாம்.

பெற்றோர்கள், பிள்ளைகள் தொடர்பில் மிக அவதானமாக இருக்க வேண்டும். பிள்ளைகள் திடீரென்று பெரியவர்களுடன் சேருகின்றார்கள் என்று சொன்னால் அது தொடர்பில் ஆராய வேண்டும்.




அவ்வாறு பெரியவர்களுடன் சேரும் அதிக சிறியவர்கள் போதைக்கு மிக விரைவாக அடிமையாகுவதை அவதானிக்க முடிகிறது.

போதைக்கு அடிமையானவர்களைக் குணப்படுத்தும் சிகிச்சை சாவகச்சேரி மற்றும் யாழ்ப்பாணத்தில் அளிக்கப்படுகிறது.

ஆகவே போதை பொருளால் கடுமையாகப் பாதிப்படைந்த உங்களுடைய பிள்ளைகள், உங்களுடைய உறவினர்களை வேண்டாதவர்களாக நினைக்காமல் அவர்களை அழைத்து வந்து உரிய முறையில் சிகிச்சை அளித்து போதைப் பொருள் தாக்கத்திலிருந்து அவர்களை விடுபடச் செய்யவேண்டும்.- என்றார்.

# மன்னார் நகரில் குண்டும் குழியுமாகியுள்ள தபாற் கந்தோர் வீதியைத் திருத்துங்கள்!

## கோரிக்கை விடுத்துள்ளனர் பொது மக்கள்

(வாஸ் கூஞ்ஞ)

மன்னாரில் மிகவும் பழமை வாய்ந்ததும் மன்னார் தலைமன்னார் பகுதிக்கு பிரதான போக்குவரத்துக்கான வீதியாகவும் அமைந்துள்ள மன்னார் நகர் பகுதியிலுள்ள தபால் கந்தோர் வீதியானது போக்குவரத்துக்குச் சிரமமாகக் காட்சி அளிப்பதாக தெரிவித்துள்ள மக்கள் அதனை விரைந்து திருத்துமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாகப் போக்குவரத்துச் செய்வோரும் மற்றும் இந்தச் சுற்றாடலில் சிப்போரும் இணைந்து 70 பேர் கையொப்பம் வைத்து, வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு இணைத் தலைவருமான எம். ஜெகதீஸ்வரனிடம் கோரிக்கைக் கடிதம் ஒன்றை வழங்கியுள்ளனர்.

இந்தக் கடிதத்தில்,

மன்னார் நகருக்குள் பிரதானமான ஒரு வீதியாக அமைந்துள்ள தபால் கந்தோர் வீதியான ஒரு பழமை வாய்ந்த வீதியாகும்.

இந்த வீதிக்கு அருகாமையில் மன்னார் பிரதான தபால் கந்தோர், மெதடிஸ்த ஆலயம், மெடிஸ்த முன்பள்ளி, மடு மாதா வைத்தியசாலை, மாற்றுத் திறனாளிகள் சிறுவர் பாடசாலை, பொலிஸ் நிலையம், பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், ஆலயம், தொலை தொடர்பு பணியகம் என பல நிறுவனங்கள் காணப்படுகின்றன.



இந்த வீதி மன்னார் தலைமன்னார் பிரதான போக்குவரத்துக்கு ஒரு பிரதான வீதியாகவும் அமைந்துள்ளது. வருடந்தோறும் இந்த வீதி மழை காலத்தில் வெள்ளமாகக் காட்சி அளிக்கின்றது.

கடந்த 2024 ஆம் ஆண்டு மன்னாரில் பெய்த பாரிய மழையின் காரணமாக இவ்வீதி பெரும் சேதத்துக்கு உள்ளாகியது. போக்குவரத்துக்கு மிகவும் மோசமான பாதையாக இது மாறியுள்ளது." என்றுள்ளது.

இது தொடர்பாக இவ்வீதிக்கு பொறுப்பு வாய்ந்த வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரியிடம் வினவியபோது தற்பொழுது இவ்வீதியை புனரமைப்பு செய்வதற்கு முப்பது மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான வேலையை விரைவில் முன்னெடுக்கவுள்ளோம். இந்த வேலை தொடங்கு வரைக்கும் குன்று குழிகளுக்கு தற்காலிக புனரமைப்பு வேலைகளைச் செய்வதற்கு நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளனர்.

# துன்னாலையில் பாற்குட பவனி

வடமராட்சி, துன்னாலை வடக்கு நவிட்டான்பதி மனோன்மணி சக்தி சமேத காளிகாம்பாள் தேவஸ்தானத்தில் நேற்று சனிக்கிழமை பால்குட அபிஷேகத்துடன் கற்பூரத் திருவிழா நடைபெற்றது.





## டித்வா புயலால் பாதிக்கப்பட்டிருந்த

# மட்டக்களப்பு - கொழும்பு கடுகதி ரயில் சேவை மீண்டும் ஆரம்பம்




(மட்டக்களப்பு நிருபர்)

டித்வா புயலால் பாதிக்கப்பட்டிருந்த மட்டக்களப்பு - கொழும்பு கடுகதி ரயில் நேரடி சேவையானது மீண்டும் ஆரம்மாகியது.


கடந்த 45 நாள்களுக்கு மேலாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த புலத்தேசி கடுகதி ரயில் சேவை மட்டக்களப்பில் இருந்து நேரடியாக கொழும்புக்கு இன்று ஞாயிற்றுக்கிமை நண்பகல் சேவையை ஆரம்பித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு போக்குவரத்து அமைச்சரிடம் விடுத்த வேண்டுகோளின் பெயரில் இந்த ரயில் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வார இறுதியில் பொது மக்களின் நலன் கருதி ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தச் சேவையானது கடந்த வெள்ளிக்கிழமை நண்பகல் கொழும்பில் இருந்து மட்டக்களப்புக்கான கடுகதி சேவையை முன்னெடுத்திருந்தது.

மட்டக்களப்பில் இருந்து நண்பகல் 11.50 இற்கு ஆரம்பமான கொழும்புக்கான இக்கடுகதி சேவை இரவு 8 மணி இது கொழும்பை சென்றடையும்.

இந்த ரயில் சேவை நிறுத்தப்பட்டு இருந்தமையை ஆட்சேபித்து கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் தமிழரசுக் கட்சி எம்.பி. சாணக்கியன் உரையாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



லி. கருனிகா,
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

# சினிமாவின் தாக்கம் மக்களின் மாற்றம்...!

முன்னோரிடம் இருந்து மாறிய தலைமுறை இன்று சினிமாவில் இருந்து மாறுகின்ற நிலைமையாக மாற்றம்பெற்றுள்ளது. அதாவது சாதாரணமாக ஒருவரின் உணவோ அல்லது உடையோ ஆரம்பத்தில் தனது முன்னோர் வழி கடத்தியதாகவே காணப்பட்டது. ஆனால் இன்று சினிமாவின் பரவலாக்கம் அவர்களை வெவ்வேறு வழிக்கு மாற்றியது.

ஆரம்ப காலத்தில் ஊடகங்களின் வளர்ச்சியோ அல்லது சினிமாவின் வளர்ச்சியோ காணப்படவில்லை. மக்களுக்குத் தகவலைப் பெற்றுக் கொள்வதற்கும் பொழுதுபோக்கைக் கழிப்பதற்குமாக ஊடகங்கள் இருந்தன. குறிப்பாக குடும்பங்கள் சேர்ந்து அல்லது ஊரவர்கள் சேர்ந்து என்று ஊர்மத்தியில் தொலைக்காட்சி பயன்பாடு காணப்பட்டது. ஆனால் இன்று ஊடகத்தின் வளர்ச்சி கையில் என்று மாற்றம் பெற்றுள்ளது.

இந்த மாற்றமானது ஆற்றுநீரைப் போல் நன்மைகள் மற்றும் தீமைகள் என்று பெருக்கெடுத்துள்ளது. அதாவது படித்த தலைமுறைகளின் முன்னுதாரணங்கள் அழிக்கப்பட்டு நடித்த தலைமுறைகளை முன்னுதாரணப்படுத்தும் மக்களை சினிமா தோற்றுவித்தது. சினிமா என்பது ஒரு கத்தி போன்றது. அதை நாம் எப்படி பயன்படுத்துகிறோம் என்பதிலேயே அதன் பலன் அடங்கியிருக்கிறது.

சாதி சமத்துவம், பெண் கல்வி, சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு, சிறுவர் உரிமை எனப் பல சமூகப் பிரச்சினைகளைத் திரையில் காட்டும் போது, அது மக்களிடம் பெரிய விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. அத்தோடு சிறந்த பொழுதுபோக்குக் கருவியாகவும் மக்கள் மத்தியில் சினிமா ஏற்படுவதோடு வாழ்க்கையின் மன அழுத்தங்களில் இருந்து விடுபடவும் துணை புரிகிறது. மேலும் ஒரு நாட்டின் கலை, கலாச்சாரம் என்று ஆடை வழியாகவோ உணவு ரீதியாகவோ வெவ்வேறு கலை வடிவங்களை மற்றவருக்கு அறிமுகப்படுத்தும் தளமாக அந்தந்த நாடுகளில் சினிமா வளர்ச்சி பெற்றுள்ளது. இவ்வாறு பல வழியாகச் சினிமாத்துறை நன்மைகளை கொடுத்தாலும் மறுபக்கம் தீமைகளையும் கொடுத்துக் கொண்டு இருக்கின்றது.

குறிப்பாக சினிமாவில் எதிர் கதாபாத்திரங்களான வில்லன், வில்லி என எதிர்மறை கதாபாத்திரங்களை விரும்பும் மக்களாய் இன்றைய சமுதாயம் மாறிவிட்டது. அவர்களுடைய பாணி, அவர்களுடைய உடையமைப்பு, உடல் அமைப்பு அவர்களின் பழக்கவழக்கங்கள் வாகனங்களின் பயன்பாடு என அனைத்துக்கும் அடிமைகளாக இன்றைய சமுதாயம் தோற்றம் பெற்றுள்ளது.

விரிவாகப் பார்த்தோமாயின், வன்முறை, போதைப் பொருள் பயன்பாடு மற்றும் புகைபிடித்தல் போன்ற காட்சிகளைப் பார்க்கும்போது, இளைஞர்கள் அதைத் தங்களை அறியாமலேயே பின்பற்றத் தொடங்குகின்றனர்.

அவர்கள் வழி செய்வது அது கௌரவத்தை ஏற்படுத்தும் என்று செய்கிறார்கள். அண்மை காலங்களில் இடம்பெற்று வருகின்ற வன்முறைகள், விபத்துக்கள் சினிமாவைப் போன்றதாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதுமாத்திரமன்றி யதார்த்த எதிர்பார்ப்பை எதிர்பார்க்கும் மக்களாய் இன்றைய சினிமா பார்வையாளர்கள்



மாறியுள்ளார்கள். திரையில் காதலிக்கும் காதல் ஜோடிகள் போல தாங்களும் இருக்க வேண்டும் என்று காதல் செய்வதும், பிரம்மாண்டமான வாழ்க்கையை கற்பனை செய்து கொள்வதும் என்று இது ஒரு கற்பனை என அறியாமலேயே மக்கள் அடிமை கொள்கிறார்கள்.

மேலும் ஒரு கலாச்சார சீரழிவை சினிமா தோற்றுவித்தது என்பதையும் அறிய முடிகிறது. அதாவது உடை உணவு என ஒவ்வொரு சமூகமும் ஒவ்வொரு கலாச்சாரத்தை உருவாக்கிய நிலையில் ஒட்டு மொத்த உலகும் ஒரு கலாச்சாரத்தின் கீழ் இயங்கு தன்மையை சினிமா கொண்டு வந்தது.

எனவே, தொழில்நுட்ப ரீதியாக சினிமா அடைந்துள்ள வளர்ச்சி வியப்பிற்குரியது. அது மக்களிடம் நேர்மறை மற்றும் எதிர்மறை என இருவேறு தாக்கங்களையும் ஏற்படுத்துகிறது. எதை ஏற்றுக்கொள்வது என்பதில் உள்ள தெளிவே ஒரு முதிர்ச்சியான சமூகத்திற்கு அடையாளம். சினிமாவின் ஒளியில் நம் சிந்தனையை மேம்படுத்திக் கொள்வோம் தவிர அதன் நிழலில் நம் வாழ்க்கையைத் தொலைத்துவிடாமல் இருப்போம்.



# பொலிஸாரால் சரோஜா திட்டத்தின் கீழ் மாணவர்களுக்குக் கற்றல் உபகரணம்!

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை துறைமுக பொலிஸ் பிரிவுக்குஉட்பட்டகுளக்கோட்டன்மண்டபத்தில், "சரோஜா" திட்டத்தின் கீழ் 600 பாடசாலை மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இன்று நடைபெற்றது.

குறித்தநிகழ்வானதுதிருகோணமலை மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மஹிந்த திசாநாயக்க தலைமையில் இடம் பெற்றது.

இதில் பொலிஸ் உயரதிகாரிகள், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், மதத் தலைவர்கள், மாணவர்களின் பாதுகாவலர்கள் உள்ளிட்ட சுமார் 1200 பேர்கள் கலந்து கொண்டனர்.


மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் பொலிஸ் திணைக்களம் ஊடாகச் சரோஜா வேலைத் திட்டத்தின் கீழ் வறிய பாடசாலை மாணவர்களை இணங்கண்டு இந்த உதவி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.








# கந்தளாய் வைத்தியசாலை முன்பாக ஒட்டோக்கள் மீது முறிந்து வீழ்ந்த மரம்



(உடப்பு நிருபர் - க.மகாதேவன்)

கந்தளாய் வைத்தியசாலை முன்பாக மரம் முறிந்து வீழ்ந்ததில் அங்கு தரித்து விடப்பட்டிருந்த ஓட்டோக்கள் சேதம் அடைந்துள் ளன.

திருகோணமலை கந்தளாய் தள வைத்தியசாலைக்கு முன்பாக இதனால் இன்று பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

அங்கு நின்றிருந்த பாரிய மரம் ஒன்று திடீரென முறிந்து வீழ்ந்ததிலேயே அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோக் கள் சேதத்துக்குள்ளாகின என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த ஓட்டோகள் நோயாளர்களை ஏற்றிச் செல்வதற்காக காத்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

# நிந்தவூர் பிரதேச செயற்பாடுகளை முன்னெடுக்க உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அதிகாரம்!

## ஆளுநரால் வர்த்தமானி அறிவித்தல் வெளியீடு

(நூருல் ஹுதா உமர்)

நிந்தவூர் பிரதேச சபையின் மீண்டெழும்செலவுகள்மற்றும்மாகாணசபையால் அங்கீகரிக்கப்பட்ட PSDG, CBG, AMP மற்றும் குறித்து ஒதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நிதி தொடர்பான நடைமுறைகளை கையாளுவதற்காக அம்பாறை மாவட்டஉள்ளூராட்சிஉதவிஆணையாளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஆளுநரால் வர்த்தமானி ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது. அந்த வர்த்தமானியில்,

நிந்தவூர் பிரதேச சபையில் தவிசாளர் முறையாக நியமிக்கப்படும்வரை அல்லது தொடர்புடைய எழுத்து மூல சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட வேறு ஏதேனும் நடைமுறை செயல்படுத்தப்படும்வரை, அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு இதன் மூலம் அதிகாரம் அளிக்கிறேன் என்று வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 171 (b) மற்றும் 1989ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க மாகாண சபைகள் (விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 2 உடன் சேர்த்து வாசிக்கப்படும் பிரிவு 223 இன் கீழ் கிழக்கு மாகாண ஆளுநர் டாக்டர். ஜயந்த லால் ரட்ணசேகர வழங்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில் இதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நிந்தவூர் பிரதேச சபையின் நிதி நிர்வாகம் மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பாக மேலே குறிப்பிடப்பட்டுள்ள சட்ட ஏற்பாடுகளை, அந்தச்சட்டத்தின்கீழ்குறிப்பிடப்பட்டுள்ள காலத்துக்குக் அமுல்படுத்துவதற்கு இதன் மூலம் அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

நிந்தவூர் பிரதேச சபையின் தவிசாளர் பதவி வெற்றிடமாக உள்ளதால் 2012 ஆம் ஆண்டு 22 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் (திருத்தம்) சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 66 (G) இன் படி, ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்து நியமிக்க வேண்டும்.

இருப்பினும், நிந்தவூர் பிரதேச சபைத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்காகக் கூட்டப்பட்ட கூட்டத்தில், தேவையான சபைக் கூட்ட கோரம் இல்லை. இதன் விளைவாக, மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் பிரிவு 66 (d) (3) இன் படி, ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்து நியமிக்க முடியவில்லை.

இதற்கமைய, நிந்தவூர் பிரதேச சபையின் தலைவர் பதவி தொடர்ந்து வெற்றிடமாக இருந்ததால், 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்க முடியாமல் போனது. இதனால் நிந்தவூர் பிரதேச சபை 2026 ஆம் ஆண்டுக்கான அத்தியாவசிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது.

இதனை அடுத்து நிந்தவூர் பிரதேச சபை சார்பான செயல்பாடுகளை, நிந்தவூர் பிரதேச சபைக்கு தவிசாளர் முறையாக நியமிக்கப்படும வரை அல்லது தொடர்புடைய எழுத்துப்பூர்வ சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட வேறு ஏதேனும் நடைமுறை செயல்படுத்தப்படும்வரை, அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு இதன் மூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்று கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜெயந்த லால் ரத்னசேகர அறிவித்துள்ளார்.



# சென்னையில் தொடர் போராட்டம்: 1,500 இடைநிலை ஆசிரியர்கள் கைது

சம வேலைக்கு சம ஊதியம் கோரி சென்னையில் தொடர்ந்து 16ஆவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்ட 1,500 இற்கும் மேற்பட்ட இடைநிலை ஆசிரியர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம வேலைக்கு சம ஊதியம் கோரிக்கையை முன்வைத்து இடைநிலை பதிவு மூப்பு ஆசிரியர் இயக்கம் (எஸ்.எஸ். டி.ஏ) சார்பில், கடந்த டிசம்பர் 26 ஆம் திகதி முதல் தொடர் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

தொடர்ந்து 16ஆவது நாளாக சென்னை எழும்பூர் காந்தி இர்வின் பாலத்தில் போராட்டம் நடைபெறும் என்று அறிவித்தனர். அங்கு வருவதற்காக எழும்பூர், பூங்கா நகர், திருவல்லிக்கேணி, சிந்தாதிரிப்பேட்டை என பல்வேறு இடங்களில் ஆசிரியர்கள் திரண்டிருந்தனர்.

இதையடுத்து, ஒவ்வொரு பகுதிகளிலும் கூடியிருந்த ஆசிரியர்களை பொலிஸார் தேடித்தேடிச் சென்று கைது செய்தனர். மேலும், போராட்ட இடத்துக்குப் புறப்பட தயாராக இருந்த எஸ்.எஸ்.டி.ஏ. சங்க நிர்வாகிகளும் முன்கூட்டியே கைது செய்யப்பட்டனர். அதைத் தொடர்ந்து, அவர் களை விடுவிக்கக் கோரியும், பொலிஸாரைக் கண்டித்தும் ஆசிரியர்கள் முழக்கமிட்டுள்ளனர்.





# டில்லியில் வரலாறு காணாத குளிர்: தொடர்ந்தும் நீடிக்குமென எச்சரிக்கை

டில்லியில் ஜனவரி மாதத்தில் குளிர் அதிகரித்து வருகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று சனிக்கிழமை காலை குறைந்தபட்ச வெப்பநிலை 4.2 டிகிரி செல்சியஸாக குறைந்தது. இது டில்லியில் குளிர்காலத்தில் பதிவான மிகக் குறைந்த வெப்பநிலையாகும். டில்லியும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளும் மூடு பனியுடன் கூடிய குளிர் அலை நிலவுகிறது. அத்துடன் வீசும் பலத்த காற்று குளிரை மேலும் அதிகரித்துள்ளது.

உத்தரபிரதேசம், பஞ்சாப், ஹரியானா உட்பட வட மாநிலங்கள் முழுவதும் அடுத்த 3 நாள்களுக்கு கடுமையான குளிர் அலை வீசும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த மாநிலங்களிலும் டில்லியைப் போன்று, மிகக் குளிரான காலைப் பொழுது 4.2 டிகிரி செல்சியஸில் பதிவாகி உள்ளது.

இந்திய வானிலை ஆய்வு மையத் தகவலின்படி வெள்ளிக்கிழமை பெய்த வழக்கத்துக்கு மாறான மழையை தொடர்ந்து இந்த திடீர் வெப்பநிலை சரிவு ஏற்பட்டுள்ளது. இந்த மழையே தலைநகர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வெப்பநிலையை குறைத்துள்ளது.

டில்லி மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளிலும் நேற்றைய குளிர் நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

கடும் குளிர் காரணமாக டில்லியில் மின்சார நுகர்வு அதிகரித்துள்ளது.

பஞ்சாப், ஹரியானா, ராஜஸ்தான், பிஹார் மற்றும் மத்திய பிரதேசத்தின் சில பகுதிகளில் மக்கள் குளிரால் பாதிக்கப்பட்டுள்ளனர். இமாச்சல பிரதேசம் மற்றும் உத்தராகண்டிலும் கடுமையான குளிர் நிலவுகிறது. சில இடங்களில் உறைபனியும் காணப்படுகிறது. உறைபனியுடன் கூடிய கடும் குளிர் காரணமாக வட மாநிலங்களின் விமானங்கள் மற்றும் ரயில் சேவைகளில் தொடர்ந்து தாமதம் ஏற்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

# வலுவான இந்தியாவை உருவாக்க வேண்டும்: அஜித் தோவல் இளைஞர்களுக்கு அழைப்பு



அனைத்து துறைகளிலும் வலுவான இந்தியாவை உருவாக்க வேண்டும் என்று தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் அழைப்பு விடுத்துள்ளார்.

சுவாமி விவேகானந்தரின் பிறந்த தினமான ஜனவரி 12 ஆம் திகதி தேசிய இளைஞர் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, ‘வளர்ச்சி அடைந்த இந்தியாவுக்கான இளம் தலைவர்களின் கலந்துரையாடல் 2026’ நிகழ்ச்சி டில்லி பாரத் மண்டபத்தில் நேற்று முன்தினம் தொடங்கியது. இரண்டாவது நாளான நேற்று தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் பங்கேற்றார். அப்போது அவர் உரையாற்றுகையில்,

“எனக்கும் இந்திய இளைஞர்களுக்கும் 60 ஆண்டுகள் வயது வித்தியாசம் உள்ளது. நான் சுதந்திரத்துக்கு முந்தைய இந்தியாவில் பிறந்தேன். எனது நாடு வளர்ச்சி அடைய வேண்டும் என்பது மட்டுமே எனது ஒரே நோக்கமாக இருந்தது. எனது சிறுவயது முதல் இப்போது வரை இந்தியாவின் வளர்ச்சிக்காக உழைத்து வருகிறேன்.

உலகின் பல்வேறு பகுதிகளில் போர்கள் நடைபெற்று கொண்டிருக்கின்றன. சில நாடுகள் தங்களது ஆதிக்கத்தை நிலைநாட்ட போர்களை நடத்தி வருகின்றன. நாம் வலுவாக இருந்தால் நம்மை யாராலும் ஒன்றும் செய்ய முடியாது. நாம் சுதந்திரமாக வாழலாம்.

ஒரு நாட்டுக்கு சிறந்த தலைமை தேவை. இப்போது இந்தியாவுக்கு மிகச் சிறந்த தலைமை கிடைத்திருக்கிறது. பிரதமர் நரேந்திர மோடியின் ஆட்சியில் புதிய உச்சத்தை இந்தியா எட்டிப் பிடித்துள்ளது. இனிமேல் ‘ஒட்டோ பைலட்’ முறையில் பயணித்தால்கூட வளர்ச்சி அடைந்த இந்தியா என்ற லட்சியத்தை நிச்சயமாக எட்ட முடியும். ஒவ்வொரு இந்திய இளைஞரும் தன்னம்பிக்கையுடன் செயல்பட வேண்டும். எந்தவொரு விஷயத்திலும் துணிச்சலாக முடிவெடுக்க வேண்டும். நீங்கள் முன்னேறினால், இந்தியாவும் முன்னேறும்.

எல்லைப் பாதுகாப்பு, பொருளாதாரம், சமூக மேம்பாடு என அனைத்து துறைகளிலும் வலுவான இந்தியாவை உருவாக்க வேண்டும். இதற்கு இந்திய இளைஞர்கள் உறுதுணையாக இருக்க வேண்டும்.” என்று தெரிவித்துள்ளார்.



# தென்னாபிரிக்கக் கடலில் சீனா, ரஷ்யா, ஈரான் ஒரு வார கூட்டு கடற்படைப் பயிற்சி ஆரம்பம்

தென்னாபிரிக்க கடற்பரப்பில் சீனா, ரஷ்யா மற்றும் ஈரான் ஆகிய நாடுகள் ஒன்றிணைந்து முன்னெடுக்கும் ஒரு வார கால கூட்டு கடற்படை பயிற்சிகள் நேற்று ஆரம்பமாகின.

'BRICS Plus' நாடுகளின் ஒத்துழைப்புடன் நடைபெறும் இந்தப் பயிற்சியானது, கடல்சார் போக்குவரத்து மற்றும் பொருளாதார நடவடிக்கைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய பிரிக்ஸ் அமைப்பானது, தற்போது மேலும் பல நாடுகளை உள்வாங்கி 'BRICS Plus' ஆக விரிவடைந்துள்ளது.

அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளின் பொருளாதார ஆதிக்கத்திற்கு மாற்றீடாகப் பார்க்கப்படும் இந்தக் கூட்டணியில் எகிப்து, இந்தோனேசியா, சவூதி அரேபியா, எத்தியோப்பியா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகளும் அங்கம் வகிக்கின்றன.

இந்தநிலையில், இந்த கூட்டுப் பயிற்சியில் ஆரம்ப விழாவில் பிரேசில், எகிப்து மற்றும் எத்தியோப்பியா ஆகிய நாடுகள் கண்காணிப்பாளர்களாகப் பங்கேற்றன.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகத்துக்கும், பிரிக்ஸ் உறுப்பு நாடுகளுக்கும் இடையே முறுகல் நிலை அதிகரித்துள்ள சூழலில் இந்தப் பயிற்சி நடைபெறுகிறது.

பிரிக்ஸ் நாடுகள் அமெரிக்காவுக்கு எதிரான கொள்கைகளைக் கடைப்பிடிப்பதாகக் குற்றம் சாட்டியுள்ள ட்ரம்ப், அனைத்து உறுப்பு நாடுகளுக்கும் மேலதிகமாக 10 சதவீத வர்த்தக வரியை விதிப்பதாக எச்சரித்திருந்தார்.

எவ்வாறாயினும்,"அமைதிக்கான விருப்பம் 2026" எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தப் பயிற்சியானது, அரசியல் நோக்கங்களைக் கொண்டது அல்ல எனவும், அமெரிக்காவுக்கு எதிரான விரோதப் போக்கு இதில் இல்லை எனவும் தென் ஆபிரிக்க இராணுவம் விளக்கமளித்துள்ளது.

அத்துடன், தென்னாபிரிக்கா அவ்வப்போது அமெரிக்க கடற்படையுடனும் இவ்வாறான பயிற்சிகளை முன்னெடுப்பதை அந்நாட்டின் இராணுவப் பேச்சாளர் லெப்டினன்ட் கேணல் மஃபோ மதேபுலா சுட்டிக்காட்டினார்.

இருப்பினும், தென்னாபிரிக்காவின் ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் இரண்டாவது பெரிய கட்சியான "ஜனநாயகக் கூட்டணி", இந்தப் பயிற்சிக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இது நாட்டின் நடுநிலைமைத் தன்மையை பாதிப்பதாகவும், சர்வதேச அரங்கில் சில நாடுகளின் அதிகாரப் போட்டியில் தென்னாபிரிக்கா ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுவதாகவும் அந்த கட்சி விமர்சித்துள்ளது.



# லண்டனில ஈரான் தூதரகத்துக்கு முன்னால் நூற்றுக்கணக்கானோர் பாரிய போராட்டம்




ஈரானில் நிலவும் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்து, லண்டனில் உள்ள ஈரான் தூதரகத்துக்கு முன்னால் நூற்றுக் கணக்கானோர் திரண்டு பாரிய போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன்போது போராட்டக்காரர் ஒருவர் தூதரகத்தின் மேல் தளத்தில் ஏறி ஈரான் தேசியக் கொடியைக் கிழித்தெறிந்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

மேற்கு லண்டனில் உள்ள ஈரான் தூதரகத்துக்கு முன்பாக நேற்று சனிக்கிழமை திரண்ட போராட்டக்காரர்கள், ஈரான் அரசாங்கத்துக்கு எதிரான முழக்கங்களை எழுப்பியதுடன் கொடிகளையும் ஏந்தியிருந்தனர்.

இதன்போது பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த அவசரப்பிரிவு ஊழியர் மீது தாக்குதல் நடத்தியமை மற்றும் அத்துமீறி நுழைந்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என லண்டன் மெட்ரோபொலிட்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் 1979ஆம் ஆண்டு ஈரானில் புரட்சியின் போது வெளியேற்றப்பட்ட ஈரானின் கடைசி மன்னரான மொஹமட் ரேஸா ஷா பஹ்லவியின் மகன், ரேஸா பஹ்லவியின் படங்களைத் தாங்கியிருந்தனர்.

ஈரானில் தற்போது நடைபெற்று வரும் போராட்டங்களில் பலரும் மன்னராட்சியை மீண்டும் கொண்டு வருமாறு கோரிக்கை விடுத்து வருவதை இது பிரதிபலிக்கிறது.

ஈரானில் பாதுகாப்புப் படையினரால் போராட்டக்காரர்கள் கொல்லப்படுவதற்கு பிரித்தானியப் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர், பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரோன் மற்றும் ஜேர்மனி ஜனாதிபதி பிரெடெரிக் மெர்ஸ் ஆகியோர் தமது கடும் கண்டனங்களை வெளியிட்டுள்ளனர்.

ஈரான் அரசாங்கம் தனது நாட்டு மக்களைப் பாதுகாக்க வேண்டும். அச்சுறுத்தல்களின்றி அமைதியான முறையில் ஒன்று கூடுவதற்கும் கருத்துத் தெரிவிப்பதற்கும் இடமளிக்க வேண்டும் என அவர்கள் கூட்டாக வலியுறுத்தியுள்ளனர்.

இதனிடையே ஈரானில் பொருளாதார நெருக்கடியால் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டங்கள் தற்போது 13ஆவது நாளை எட்டியுள்ளன. இதுவரை குறைந்தது 50 போராட்டக்காரர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என மனித உரிமைகள் அமைப்புகள் தெரிவிக்கின்றன.

# பேச்சில் உடன்பாடு எட்டாவிட்டால் கிரீன்லாந்தைக் கைப்பற்றுவோம்

## ட்ரம்ப் பகிரங்க எச்சரிக்கை




பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டாவிட்டால் கிரீன்லாந்தை கைப்பற்றுவோம் என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஆர்டிக் பகுதியில் உள்ள உலகின் மிகப்பெரிய தீவான கிரீன்லாந்து, டென்மார்க் நாட்டின் தன்னாட்சி பிராந்தியமாக உள்ளது.

இதற்கிடையே இராணுவ நடவடிக்கை எடுக்க வாய்ப்புள்ளதுடன், பாதுகாப்பு காரணங்களுக்காக கிரீன்லாந்து அமெரிக்காவுடன் இணைக்கப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்தார்.

இதற்கு டென்மார்க் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

இந்த நிலையில் பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டாவிட்டால் கிரீன்லாந்தை கைப்பற்ற கடினமான வழியை தேர்வு செய்வோம் என்று ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அதன்படி, கிரீன்லாந்து தீவு அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்புக்கு முற்றிலும் அவசியமானது.

உலகின் மிகப்பெரிய தீவைச் சுற்றியுள்ள கடல் பகுதிகள் தற்போது ரஷ்யா, சீன கப்பல்களால் நிரம்பியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிரீன்லாந்துக்குப் பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் கிரீன்லாந்து விடயத்தில் ஏதேனும் ஒரு நடவடிக்கையை எடுக்கவுள்ளதாக ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

கிரீன்லாந்தை கைப்பற்றாவிட்டால் ரஷ்யாவோ அல்லது சீனாவோ கிரீன்லாந்தைக் கைப்பற்றிவிடும் என்றும் ரஷ்யாவையோ அல்லது சீனாவையோ அமெரிக்காவின் அண்டை நாடாக வைத்திருக்க விரும்பவில்லை என்றும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

கனடா முரசு

பக்கங்கள் - 03

ஞாயிற்றுக்கிழமை 11/01/2026

## விட்பியில் வாகனம் மோதியதில் 82 வயதான மூதாட்டி உயிரிழப்பு



C3



# ஈரான் மக்கள் எழுச்சிக்கு ஆதரவாக கனடாவில் ஆர்ப்பாட்டம் முன்னெடுப்பு

**ஈரானில் நடைபெற்று வரும் மக்கள் எழுச்சிக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், கனடாவின் பல நகரங்களில் நேற்று சனிக்கிழமை ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.**

**ஈரான் முழுவதும் பரவி வரும் இந்த மக்கள் கிளர்ச்சி இரண்டாவது வாரத்தை எட்டிய நிலையில், ஈரானிய மக்களுடன் ஒற்றுமையை வெளிப்படுத்தவே இந்தப் போராட்டங்கள் நடத்தப்பட்டன.**

C2

# பெற்றோர், பாட்டி-தாத்தா விசாத் திட்டத்தில் புதிய விண்ணப்பம் தற்காலிகமாக நிறுத்தம்



Parents and Grandparents Program (PGP) எனப்படும் பெற்றோர் மற்றும் பாட்டி–தாத்தா விசா திட்டத்தில் புதிய விண்ணப்பங்களை கனடா அரசு தற்காலிகமாக நிறுத்தியுள்ளது.

இந்த திட்டம், கனடாவில் வசிக்கும் குடியிருப்பாளர்கள் மற்றும் குடிமக்கள், தங்கள் பெற்றோர் மற்றும் பாட்டி–தாத்தாவை ஸ்பான்சர் செய்து அழைத்துவர உதவியது.

புதிய விண்ணப்பங்கள் இனி ஏற்கப்படாது என அரசு அறிவித்துள்ளது.

ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் மட்டும் செயல்படுத்தப்படும்.

அரசு, “திட்டத்தை மறுபரிசீலனை செய்து, சமநிலை மற்றும் நீடித்த நடைமுறைகளை உருவாக்க வேண்டும்” என தெரிவித்துள்ளது.

PGP திட்டம், கனடாவில் உள்ள குடும்பங்களுக்கு மீண்டும் ஒன்றாக வாழும் வாய்ப்பு வழங்கியது.

ஆனால், அதிகமான விண்ணப்பங்கள் காரணமாக செயல்முறை சிரமம் ஏற்பட்டது.

அரசு, குடியேற்ற அமைப்பை சமநிலைப்படுத்த இந்த முடிவை

C2



# சேகரிக்கப்படாத நீல மறுசுழற்சித் தொட்டிகள்: ஜி.ரி.ஏ. குடியிருப்பாளர்கள் கடும் ஏமாற்றம்

ஒன்டாரியோ மாநிலத்தின் புதிய மறுசுழற்சி சேகரிப்பு திட்டம் சிக்கலான தொடக்கத்தை சந்தித்து வருகிறது. பல நாள்களாக நீல மறுசுழற்சி தொட்டிகள் சேகரிக்கப்படாததால், கிரேட்டர் டொராண்டோ ஏரியா (ஜி.ரி.ஏ.) முழுவதும் குடியிருப்பாளர்கள் கடும் அதிருப்தியடைந்துள்ளனர்.

இதுதொடர்பில் மிசிசாகா மேயர் காரலின் பாரிஷ் கூறுகையில்,

“ஒரே நாளில் பீல் பிராந்தியத்திற்கு மட்டும் 2,000 இற்கும் மேற்பட்ட புகார்கள் வந்துள்ளன.

ஜனவரி 1 முதல் புதிய மறுசுழற்சி திட்டத்தை நடத்தும் பொறுப்பை ஏற்றுள்ள இலாப நோக்கமற்ற அமைப்பான Circular Materials நிறுவனத்தின் செயற்பாடு நடைபெறவில்லை” என்றும் தெரிவித்தார்.

இந்த புதிய திட்டம், பேக்கேஜிங் மற்றும் காகித உற்பத்தியாளர்கள் மறுசுழற்சிக்கான செலவையும் மேலாண்மையையும் முழுமையாக ஏற்க வேண்டும் என்ற மாகாண அரசின் மாற்றத்தின் விளைவாக உருவாக்கப்பட்டது.

டொராண்டோவில், சில குடியிருப்பாளர்கள் பல நாள்களாக தங்களது மறுசுழற்சி குப்பைகள் சேகரிக்கப்படாமல் காத்திருந்தனர்.

“இது அருவருப்பானது. இப்படி இருக்கும் நிலையில் டொராண்டோ நகர குடிமகளாக இருப்பதில் எனக்கு வெட்கமாக இருக்கிறது,” என்று தனது தெருவில் சேகரிக்கப்படாமல் கிடந்த நீல தொட்டிகளை காட்டிக்காட்டி ஒருவர் தெரிவித்துள்ளார்.

புதன்கிழமை கூடுதலாக ஒரு மறுசுழற்சி சேகரிப்பு நடைபெறும் என தபாலில் வந்த விளக்கக் குறிப்பு கிடைத்ததாகவும், ஆனால் யாரும் வரவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

மற்றொரு குடியிருப்பாளர் தெரிவிக்கையில்,

“இரண்டு நாள்களுக்குள் மறுசுழற்சி சேகரிக்கப்படும் என்று இந்த வாரம் ஆரம்பத்தில் ஒரு பிரதிநிதி கூறியிருந்தார். ஆனால் அந்த இரண்டு நாள்க-ளும் கடந்தும், அவரது நீல தொட்டி வீதியோரத்தில் அப்படியே உள்ளது.

இங்கே விலங்குகள் தொடர்பான பிரச்சினை உள்ளது. இப்படி குப்பை சேகரிக்காமல் விடுவது நிலைமையை மேலும் மோசமாக்குகிறது,” என்று அவர் கூறினார்.

## ஈரான் மக்கள்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாண்ட்ரியல் மற்றும் ஒட்டாவாவில் நடைபெற்ற போராட்டங்களில், இஸ்லாமிய ஆட்சியின் வீழ்ச்சியும், 47 ஆண்டுகளாக அமெரிக்காவில் நிர்பந்தத் துரத்தலில் வாழ்ந்து வரும் முன்னாள் ஈரான் ஷாவின் மகன் ரேசா பஹ்லவி மீண்டும் நாட்டிற்கு திரும்ப வேண்டும் என்றும் போராட்டக்காரர்கள் கோரினர்.

மாண்ட்ரியல் நகர மையத்தில் இருந்து அமெரிக்க தூதரகத்தை நோக்கி சென்ற போராட்டக்காரர்கள், கனடா அரசு கூடுதல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.



“தற்போது ஈரான் வீதிகளில் போராடி வரும், ஆட்சிமாற்றம் கோரி சித்திரவதை செய்யப்படுகின்ற மற்றும் கொல்லப்படுகின்ற ஈரானிய மக்களின் குரலாக இருக்கவே நாங்கள் இங்கு வந்துள்ளோம். கிங் ரேசா பஹ்லவியை மீண்டும் கொண்டு வரவே அவர்கள் போராடுகின்றனர்,” என்று மாண்ட்ரியல் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

இதுபோன்ற ஆர்ப்பாட்டங்கள் கனடாவின் ஏனைய நகரங்களிலும் நடைபெற்றன. டொராண்டோவில் கடந்த வெள்ளிக்கிழமை ஒரு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## பெற்றோர்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்துள்ளது.

புதிய விண்ணப்பதாரர்கள், தங்கள் பெற்றோர் மற்றும் பாட்டி-தாத்தாவை கனடாவுக்கு அழைத்து வர முடியாது. இதனால், குடும்பங்கள், தற்காலிக விசா அல்லது பிற வழிகளை பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

குடியேற்ற ஆலோசகர்கள், “இந்த முடிவு பல குடும்பங்களுக்கு மன அழுத்தத்தை ஏற்படுத்தும்” என கூறுகின்றனர்.

கனடா அரசு பெற்றோர் மற்றும் பாட்டி-தாத்தா குடியேற்ற திட்டத்தில் புதிய விண்ணப்பங்களை நிறுத்தியிருப்பது, குடும்பங்களை ஒன்றிணைக்கும் வாய்ப்புகளை குறைத்தாலும், குடியேற்ற அமைப்பை சீரமைக்கும் முயற்சியாக பார்க்கப்படுகிறது.



# விட்பியில் வாகனம் மோதியதில் 82 வயதான மூதாட்டி உயிரிழப்பு

விட்பி நகரில் கடந்த வெள்ளிக்கிழமை வாகனம் மோதியதில் கடுமையாக காயமடைந்த 82 வயது பெண் உயிரிழந்துள்ளார்.

இந்த தகவலை டர்ஹாம் பிராந்திய பொலிஸார் நேற்று சனிக்கிழமை உறுதிப்படுத்தினர்.

ப்ராக் ஸ்ட்ரீட் நார்த் மற்றும் மேரி ஸ்ட்ரீட் வெஸ்ட் பகுதியில் வீதியை கடக்க முயன்றபோது அந்த பெண் மீது ஒரு வாகனம் மோதியது.

உயிருக்கு ஆபத்தான நிலையில், டொராண்டோ பகுதியிலுள்ள மருத்துவமனைக்கு அவர் கொண்டு செல்லப்பட்டார். ஆனால் சிறிது நேரத்திலேயே அவர் உயிரிழந்தார்.

இறந்த பெண்ணின் அடையாளம் இதுவரை வெளியிடப்படவில்லை.

இதற்கிடையில், வாகனத்தை செலுத்திய நபர் சம்பவ இடத்திலேயே நின்று, பொலிஸாருக்கு முழுமையாக ஒத்துழைத்தார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்து தொடர்பான சூழ்நிலைகள் குறித்து பொலிஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# டொராண்டோ கிழக்குப் பகுதியில் நடந்த கத்திக் குத்துத் தாக்குதலில் ஒருவர் காயம்




டொராண்டோ நகரத்தின் கிழக்கு பகுதியில் இடம்பெற்ற கத்திக் குத்து தாக்குதல் சம்பவத்தில், 60 வயதுக்கு மேற்பட்ட ஒருவர் காயமடைந்துள்ளார் என டொராண்டோ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

டான்ஃபோர்த் மற்றும் பிராட்வ்யூ அவென்யூஸ் பகுதியில் கத்திக் குத்துதல் சம்பவம் நடந்ததாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

சம்பவ இடத்திற்கு சென்ற அதிகாரிகள், கத்திக் குத்துக் காயத்தால் பாதிக்கப்பட்ட நிலையில் அந்த நபரை கண்டுபிடித்தனர். அவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர். அவரது காயங்கள் உயிருக்கு ஆபத்தானவை அல்ல என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்தில் தொடர்புடைய சந்தேக நபரை பொலிஸார் தேடி வருகின்றனர். அவர் 30 முதல் 35 வயதுக்குள் உள்ள கருப்பினத்தைச் சேர்ந்த ஆணாகவும், உயரம் சுமார் 5 அடி 11 இன்ச் என்றும், கடைசியாக நீல நிற ஹூடி ஸ்வெட்டர் அணிந்திருந்தார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கத்திக் குத்துதல் சம்பவத்திற்கான காரணமான தற்போது வரை தெரியவில்லை.